# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

தமிழ்நாடு ஆளுநர்

## திரு. ஆர்.என். ரவி அவர்கள்

ஆற்றிய உரை

திருவள்ளுவர் ஆண்டு–2057, தைத் திங்கள் 6 ஆம் நாள்

2026 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 20 ஆம் நாள்

**மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களே!**

**வணக்கம்,**

வரலாற்றுச் சிறப்பு மிக்க தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2026 ஆம் ஆண்டிற்கான முதல் கூட்டத்தொடரில் உரையாற்றுவதை நான் பெரும்பேறாகக் கருதுகின்றேன். இத்தருணத்தில் அனைவருக்கும் எனது இனிய புத்தாண்டு நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். கடந்த ஐந்து ஆண்டுகளில், இம்மாமன்றத்தின் பல்வேறு அமர்வுகளில், பல ஆக்கப்பூர்வமான விவாதங்களில் பங்கேற்று, நமது மாநிலத்தின் வளர்ச்சியை வழிநடத்திய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என் மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அரசின் வழிகாட்டியாக விளங்கும் அய்யன் திருவள்ளுவரின் காலத்தால் அழியாத வாக்கினை நினைவுகூர்ந்து எனது உரையைத் தொடங்குகிறேன்.

**மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்**

**யாவுள முன்நிற் பவை**

(குறள்-636)

*(நூலறிவுடன் இயற்கையான மதிநுட்பமும் உள்ளவர்களுக்கு முன்னால் எந்த சூழ்ச்சிதான் எதிர்த்து நிற்க முடியும்? முடியாது)*

2. நமது மாண்புமிகு முதலமைச்சரின் அயராத உழைப்பினால், கடந்த நிதியாண்டில் 11.19 சதவீதம் என்ற உயரிய பொருளாதார வளர்ச்சியை தமிழ்நாடு எய்தியுள்ளது. கடந்த 14 ஆண்டுகளில் இத்தகைய உயர் வளர்ச்சியை நமது மாநிலம் அடைவது இதுவே முதன்முறை. இதன் மூலம் பொருளாதார வளர்ச்சியில் நாட்டிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.

3. தமிழ்நாட்டில் பொங்கல் திருநாளை மக்கள் சிறப்பாகக் கொண்டாடும் விதமாக 6,936 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், 2.23 கோடி குடும்பங்கள் பயனடையும் வகையில், ஒவ்வோர் அரிசி அட்டைதாரருக்கும் 3,000 ரூபாயும், ஒரு கிலோ பச்சரிசியும், ஒரு கிலோ

சர்க்கரையும், ஒரு முழு செங்கரும்பும், பொங்கல் பரிசாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டபடி வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் உவகையுடன் தமிழர் திருநாளைக் கொண்டாடிட இது பெரிதும் உதவி இருக்கும் என நான் நம்புகிறேன்.

4. நமது அரசு பொறுப்பேற்றபோது கோவிட் பெருந்தொற்றின் காரணமாக தமிழ்நாட்டு மக்கள் பல்வேறு இன்னல்களை சந்தித்து வந்தனர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெருமுனைப்புடன் செயலாற்றி, அனைத்து மக்களுக்கும் கோவிட் தடுப்பூசி, மருத்துவமனைகளில் போதுமான ஆக்சிஜன் வசதி, கூடுதல் படுக்கை வசதிகள் போன்ற பல்வேறு முயற்சிகளின் மூலம் கோவிட் பெருந்தொற்றிலிருந்து தமிழ்நாட்டினை மீட்டெடுத்த மாபெரும் சாதனையை வரலாறு என்றென்றும் நன்றியுடன் நினைவு கூறும்.

5. ஆண்களுக்கு நிகரான உரிமையை பெண்களும் பெறவேண்டும் என்றால், அதற்கு

கல்வியறிவு அடிப்படைத் தேவை என்றும், ஆண்களைப் போலவே பெண்களுக்கும் பொருளாதாரச் சுதந்திரம் அவசியம் என்றும் வலியுறுத்தியவர் தந்தை பெரியார். பெண்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கும் அனைத்துக் காரணிகளையும் தமிழ்நாடு காலந்தோறும் தகர்த்தெறிந்து வருகிறது. பெண்களுக்குச் சொத்துரிமை, அரசுப் பணிகளில் 30 சதவீத இடஒதுக்கீடு, உள்ளாட்சி அமைப்புகளில் 33 சதவீத இடஒதுக்கீடு, காவல் துறையில் பெண்கள் நியமனம், மகளிர் சுயஉதவிக்குழு இயக்கம் எனப் பல்வேறு முன்னெடுப்புகள் மூலம், மகளிர் வாழ்வில் மகத்தான மாற்றங்களை ஏற்படுத்தியவர் முத்தமிழறிஞர் கலைஞர். அவரின் கொள்கைப் பாதையில் நடைபோடும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு, மகளிர் மேம்பாட்டுக்காக அளப்பரிய பல திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது.

6. பதவியேற்ற நாளன்றே நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கையெழுத்திட்ட மகத்தான

திட்டம்தான் '**மகளிர் விடியல் பயணம்**'. மகளிரின் பொருளாதாரச் சுமையைக் குறைத்திடும் வகையில், கட்டணமில்லாப் பேருந்துப் போக்குவரத்துக்கு வழிவகுத்த அந்த ஒரு கையெழுத்தால், ஒரு பெண் சராசரியாக மாதம் ஒன்றுக்கு 888 ரூபாய் வரை சேமிப்பதாக மாநில திட்டக்குழு ஆய்வறிக்கை தெரிவிக்கிறது.

7. சமுதாயத்தில் பெண்களின் நிலையை உயர்த்திடவும் அவர்களின் உரிமையை நிலைநாட்டும் உயரிய நோக்கத்துடனும் அறிமுகப்படுத்தப்பட்ட '**கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்**' மூலம் ஒரு கோடியே முப்பது இலட்சம் பெண்கள் ஒவ்வொரு மாதமும் 1,000 ரூபாய் உரிமைத் தொகையாகப் பெறுகின்றனர். மகளிரின் சமூகப் பங்களிப்பினை அங்கீகரித்து அவர்களின் அவசியத் தேவைகளை நிறைவு செய்திட உதவும் இத்திட்டம், நாட்டின் பல்வேறு மாநிலங்களில் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்திற்காக, இதுவரை 33,464 கோடி ரூபாய் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

8. பள்ளிக் குழந்தைகளின் நலன் காத்திட நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தியாவிலேயே முதன்முறையாக '**முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை**' அறிமுகப்படுத்தினார். இத்திட்டத்தின் மூலம், தமிழ்நாட்டில் தற்போது 19.34 இலட்சம் குழந்தைகள் பயன் பெற்று வருகின்றனர். குழந்தைகளின் நலனில் பெரிதும் அக்கறையும், கருணை உள்ளமும் கொண்டுள்ள நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இத்திட்டத்தினை நகர்ப்புறங்களில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் இந்த ஆண்டு விரிவுபடுத்தியுள்ளார். இத்திட்டத்தின் கீழ் பயன் பெறும் அனைத்து குழந்தைகளுக்கும் தேவையான ஊட்டச்சத்து உறுதி செய்யப்பட்டுள்ளது மட்டுமன்றி, அவர்களின் பள்ளி வருகையும், கற்றல் திறனும் உயர்ந்துள்ளதை மாநில திட்டக் குழுவின் ஆய்வுகள் உணர்த்துகின்றன.

9. பெண் கல்வியை ஊக்குவித்து, அவர்களின் உயர்கல்வியை உறுதிசெய்யும் விதமாக, ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில்

பயின்று, பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு மற்றும் தொழிற்கல்வி என உயர்கல்வியைத் தொடரும் மாணவிகளுக்கு '**மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் புதுமைப்பெண் திட்டத்தின்**' மூலம் மாதந்தோறும் 1,000 ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகின்றது. இதன் மூலம் உயர்கல்வியில் சேரும் மாணவிகளின் விகிதம் அதிகரித்து இடைநிற்றல் பெருமளவிற்கு குறைந்துள்ளது. நாட்டிலேயே அதிக அளவாக உயர்கல்விச் சேர்க்கையை தமிழ்நாடு பெற்றுள்ளதற்கு இத்திட்டத்தின் பங்களிப்பு முக்கியமானதாகும்.

10. குடும்பத்தின் வளர்ச்சிக்கும் பொருளாதாரத்திற்கும் பங்களிக்க வேண்டும் எனும் பெருங்கனவோடு, தங்கள் இருப்பிடங்களை விட்டு நகரங்களுக்கு வரும் பெண்களுக்கு நவீன வசதிகளுடன் நியாயமான கட்டணத்தில் பாதுகாப்பான தங்கும் வசதியைப் பெற்றிட 19 '**தோழி விடுதிகள்**' ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்தகைய திட்டங்கள் மூலம் இந்தியாவிலேயே தொழிற்சாலைகளில் பணிபுரியும்

பெண் ஊழியர்களை அதிகமாகக் கொண்ட (40.3 சதவீதம்) மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது.

11. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் காலத்தில் தொடங்கப்பட்ட மகளிர் சுயஉதவிக் குழு இயக்கம், இன்று ஆல் போல் தழைத்து, ஒரு மாபெரும் மக்கள் இயக்கமாக, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் மொத்தம் 4.9 இலட்சம் சுயஉதவிக் குழுக்கள் ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் செயல்பட்டு வருகின்றன. கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒரு இலட்சத்து 34 ஆயிரம் கோடி ரூபாய் வங்கிக் கடனாக மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

12. வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் நலனைக் கருத்திற்கொண்டு பொது விநியோகத் திட்டப் பொருட்களை அவர்களின் இல்லத்திற்கே சென்று வழங்கிடும் பொருட்டு,

மாண்புமிகு முதலமைச்சரின் '**தாயுமானவர்**' திட்டத்தை இந்த அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ், 18.37 இலட்சம் குடும்ப அட்டைகளில் உள்ள 27.55 இலட்சம் வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பயனடைந்து வருகிறார்கள். பகல் நேரங்களில் வயது முதிர்ந்தோரின் பாதுகாப்பு மற்றும் அவர்களுக்கு ஆதரவான சூழலை உறுதி செய்யும் பொருட்டு, அன்புள்ளம் கொண்ட நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி 25 '**அன்புச்சோலை**' இல்லங்கள் உருவாக்கப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் செயல்பட்டு வருகின்றன.

13. ஆதிதிராவிடர், பழங்குடியினரின் கல்வி மற்றும் சமூக முன்னேற்றத்திற்கான முன்னெடுப்புகளுக்கு தனிக்கவனம் செலுத்தப்பட்டு, பல்வேறு முன்னோடித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாளை, சமத்துவ நாளாக நமது அரசு கடைபிடித்து வருகிறது. தமிழ்நாட்டின் பழங்குடியினர் மொழி வளங்கள் முறையாக

ஆவணப்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் சமூகப் பொருளாதார நிலையை உயர்த்த இதுவரை 3 இலட்சம் இலவச வீட்டுமனை இணையவழி பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

14. ‘**அயோத்திதாசப் பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்**’ கீழ் ஆதிதிராவிடர் மக்கள் வசிக்கும் பகுதிகளில் 1,000 கோடி ரூபாய் மதிப்பிலான உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. மேலும், பழங்குடியினர் வாழும் பகுதிகளை மேம்படுத்துவதற்காக ‘**தொல்குடி திட்டத்தின்**’ மூலம் 1,000 கோடி ரூபாய் மதிப்பில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. பழங்குடியினருக்காக, 315 கோடி ரூபாய் மதிப்பில் 7,255 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இதுமட்டுமல்லாது, 246 கிராம அறிவுசார் மையங்கள் ஆதிதிராவிடர் மக்களுக்கும் பயனளிக்கும் வகையில் தேவையான வசதிகளுடன்

அவர்களின் வாழ்விடங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன.

15. ‘**முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவோர் திட்டம்** (**CM-ARISE**)’ தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரை 8,440 பயனாளிகளுக்கு 164 கோடி ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த 4 ஆண்டுகளில், ‘நன்னிலம்’ மகளிர் நிலவுடைமைத் திட்டத்தின் கீழ் 1,026 ஆதிதிராவிட மகளிருக்கு 50 கோடி ரூபாய் மானியம் அளிக்கப்பட்டு, அவர்கள் தற்போது நில உடைமையாளர்களாக உயர்ந்துள்ளனர். அவர்களின் குடியிருப்பு வசதி மற்றும் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

16. ‘**அண்ணல் அம்பேத்கர் அயலக கல்வித் திட்டத்தின்**’ கீழ் அதிகபட்ச உதவித்தொகை 36 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டம்

அறிமுகப்படுத்தப்பட்ட 2003 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை, மிகமிகக் குறைவாக ஆறு மாணவர்கள் மட்டுமே பயனடைந்தனர். ஆனால், 2021ஆம் ஆண்டிலிருந்து, இதுவரை 385 ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு 162 கோடி ரூபாய் உதவித் தொகை அளிக்கப்பட்டு, அவர்கள் உலகெங்கிலுமுள்ள பல்வேறு புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களில் பயின்று வருகின்றனர்.

17. ஆதிதிராவிட குடியிருப்புகளைக் குறிக்கப் பொதுவாகப் பயன்படுத்தப்படும் 'காலனி' என்ற சொல் ஆதிக்கத்தின் அடையாளமாகவும், தீண்டாமைக்கான குறியீடாகவும் மாறிவிட்டதால், அச்சொல்லை அதிகாரப்பூர்வ ஆவணங்களிலிருந்தும், பொதுப் பயன்பாட்டிலிருந்தும் நீக்குவதற்கு இந்த அரசு ஆணையிட்டுள்ளது. இதன் மூலம், பிறப்பினால் அனைவரும் சமம், செய்யும் தொழிலில் காட்டுகிற திறமையில் மட்டுமே வேறுபாடு காண முடியும் என்ற

அய்யன் திருவள்ளுவரின் வாக்கிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செயல் வடிவம் அளித்துள்ளார்.

18. அறியாமையால் இளைஞர்களின் பாதங்கள் அழிவுப் பாதையில் பயணப்பட்டுவிடக் கூடாதென்பதற்காக, போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு இயக்கம், இளைஞர்தம் அறவுணர்வை வளர்த்திடும் வகையில் தந்தை பெரியார் நினைவுச் சொற்பொழிவு, மாநில அளவிலான **சமூகநீதிப் பயிலரங்கம்** போன்ற முன்னோடித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

19. அரசுப்பள்ளி மாணவர்களுக்கு இளநிலை தொழிற்கல்விப் படிப்புகளில் 7.5 சதவீதம் உள் ஒதுக்கீடு அளிக்கும் திட்டத்தின் கீழ், கல்லூரிகளில் சேரும் மாணவர்களின் கல்வி, விடுதி மற்றும் போக்குவரத்து ஆகியவற்றுக்கான கட்டணத்தையும் அரசே ஏற்றுக்கொள்கிறது. இம்முன்னோடித் திட்டத்திற்கு, கடந்த ஐந்து ஆண்டுகளில் 36,419 மாணவர்கள்

பயன்பெறும் வகையில் 703 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

20. தேசிய நிறுவன தரவரிசைக் கட்டமைப்பின் கீழ் (NIRF), இந்திய அளவில் உள்ள முதல் 100 உயர் கல்வி நிறுவனங்களில் 17 நிறுவனங்கள் அமையப்பெற்று தமிழ்நாடு தொடர்ந்து முதலிடத்தினைப் பெற்று வருகிறது. '**பெருந்தலைவர் காமராஜர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டத்தின்**' கீழ், கடந்த நான்கு ஆண்டுகளில் 909 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரசுப் பொறியியல், கலை, அறிவியல் மற்றும் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில், கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகங்கள், பணிமனைகள், தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்டவை அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், இவ்வரசின் மிகப்பெரிய சாதனைகளில் ஒன்றாக, கடந்த ஐந்து ஆண்டுகளில் 36 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் புதிதாகத் துவக்கப்பட்டுள்ளன.

21. வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்ப யுகத்தில் நம் மாணவர்கள் செயற்கை நுண்ணறிவு உட்பட தொழில்நுட்பத் துறையில் உள்ள வாய்ப்புகளை முழுமையாகப் பயன்படுத்திடவும், அத்துறையில் அரிய சாதனைகள் படைத்திடவும், தமிழ்நாட்டில் உள்ள கலை, அறிவியல், பொறியியல், வேளாண்மை மற்றும் மருத்துவம் உட்பட பல்வேறு கல்லூரிகளில் பயின்று வரும் 10 இலட்சம் மாணவர்களுக்கு இந்த ஆண்டில் 2,172 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மடிக்கணினிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அரசின் இத்தகைய முன்முயற்சிகள் மாணவர்களின் அறிவுத் திறனை மேம்படுத்துவதுடன், உலகளாவிய போட்டித் திறன் கொண்ட மனித வளமாக அவர்களை உருவாக்கும் ஒரு வலுவான அடித்தளமாகவும் திகழ்கிறது. அறிவு, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க முயற்சிகளைத் தொடர்ந்து ஊக்குவிப்பதன் மூலம் தமிழ்நாடு மேலும் முன்னேறி, இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தில் முன்னணி மாநிலமாக விளங்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

22. மாணவர்தம் உயர்கல்விக்கு உதவும் வகையில் புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன் ஆகிய திட்டங்களின் கீழ் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கி, அவர்களது கல்விச் செலவில் ஏற்படும் பற்றாக்குறை தணிக்கப்படுகிறது. இத்திட்டங்களின் மூலமாக 12 இலட்சத்திற்கும் மேலான மாணவ மாணவியர்கள் பயன்பெற்று வருகின்றனர். இத்திட்டங்களுக்கு கடந்த 5 ஆண்டுகளில் இந்த அரசு 1,831 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது.

23. 2021-22 ஆம் ஆண்டில் ஆட்சி அமைந்த தொடக்கத்தில், கொரோனா பெருந்தொற்று காரணமாகப் பள்ளிப் படிப்பில் ஏற்பட்ட தொய்வைச் சரிசெய்து, இடைநிற்றலைக் குறைக்க, தன்னார்வலர்கள் உதவியுடன் மாணவர்களின் இல்லத்துக்கே சென்று கல்வி வழங்க, '**இல்லம் தேடிக் கல்வி**' திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் எண்ணையும் எழுத்தையும் பழுதறக் கற்க உதவும் '**எண்ணும் எழுத்தும்**' திட்டமும்,

வாசிப்பில் ஆர்வத்தைத் தூண்டுவதற்காக வாசிப்பு இயக்கமும் தொடங்கப்பட்டன.

24. தகைசால் பள்ளிகள், கலைத் திருவிழா, உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள், திறன்மிகு வகுப்பறைகள், தொழிற்கல்விப் பாடத்திட்ட மறுசீரமைப்பு, ஆசிரியர்களுக்குக் கைக்கணினி எனப் பல்வேறு முன்னெடுப்புகள் பள்ளிக்கல்வித் துறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. '**பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின்**' கீழ், வகுப்பறைகள், ஆய்வகங்கள், தகவல் தொழில்நுட்பம் முதலிய உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளின் கட்டமைப்பினை மேலும் வலுப்படுத்தும் வகையில், கடந்த ஐந்து ஆண்டுகளில் 4,247 பள்ளிக் கட்டடங்கள் கட்டுமானத்திற்காக 1,359 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது மட்டுமன்றி பள்ளிகளுக்குப் புத்துயிர் அளித்திட

678 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

25. திசைதோறும் திராவிடம், முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம், இளந்தளிர் இலக்கியத் திட்டம், நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள் வெளியீடு எனப் பல்வேறு முன்னெடுப்புகள் மூலம், தமிழ்ப் பண்பாட்டைப் பேணி வளர்த்திடும் அறிவுச் செல்வங்களான நூல்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. இலக்கியத் திருவிழாக்கள், நூலகங்கள் போன்றவற்றின் வாயிலாக அறிவுப் பரவலாக்கமும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. பள்ளிக் கல்வியைப் பரிவுடன் வளர்த்தெடுக்கும் பன்முகத் தன்மையிலான முயற்சிகள் வாயிலாக கல்விக்கான வலுவான அடித்தளம் இடப்படுகிறது.

26. இளைஞர்களின் ஆற்றலை முழு அளவில் பயன்படுத்தி, விளையாட்டு வீரர், வீராங்கனைகளின் வளர்ச்சியை ஊக்குவிப்பதுடன், மாநிலத்தின் பெருமையையும் உலகறியச் செய்யும் பரந்துபட்ட

உட்கட்டமைப்பு வசதிகள் நமது அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திறமை வாய்ந்த விளையாட்டு வீரர்களை அடையாளம் காணவும், அடையாளம் காணப்பட்ட வீரர்கள், விளையாட்டுகளில் முழுமையாக ஈடுபடத் தேவையான களங்களை அமைத்துத் தருவதிலும், அவர்களுக்குத் தேவையான பயிற்சிகளைத் தருவதிலும் அரசு ஆர்வத்துடன் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது. உள்ளூர் அளவிலான விளையாட்டு வீரர்கள், மாநில அளவிலும், தேசிய அளவிலும், உலக அளவிலும் வெற்றிபெறத் தேவையான அனைத்து முயற்சிகளும் முழுமூச்சுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

27. செயற்கை இழை ஓடுபாதைகள், விளையாட்டு அரங்கங்கள், நீச்சல் குளங்கள், தரமான புதிய மாவட்ட விளையாட்டு வளாகங்கள் மற்றும் ஒலிம்பிக் அகாடமிகள் போன்றவை உருவாக்கப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே செயல்பாட்டிலுள்ள நவீன அரங்கங்கள் சர்வதேசத் தரத்துக்கு ஈடுகொடுக்கும் வகையில்

மேம்படுத்தப்பட்டு வருகின்றன. கேலோ இந்தியா மையங்கள் மற்றும் ஸ்டார் அகாடமிகள் போன்ற அமைப்புகள் விளையாட்டு வீரர்களின் திறனை மேம்படுத்த உருவாக்கப்பட்டுள்ளன.

28. விளையாட்டு வீரர்களின் உடற்திறனைப் பாதுகாப்பதில் தனி அக்கறை காட்டும் இந்த அரசு, ஒருங்கிணைந்த விளையாட்டு அறிவியல் மையங்களை அமைத்துள்ளது. TN Sports ஆடுகளம் செயலி, டாக்டர் கலைஞர் விளையாட்டுத் தொகுப்புகள் வழங்குதல், தமிழ்நாடு வாகையர் அறக்கட்டளை (Tamil Nadu Champions Foundation) போன்ற முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முத்தாய்ப்பாக சென்னை, செம்மஞ்சேரியில் உலகத் தரத்திலான விளையாட்டு நகரத்தினை 261 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

29. கடந்த ஐந்து ஆண்டுகளில் தொழிலாளர் நலத் துறையின் மூலம் நடத்தப்பட்ட 2,437 வேலைவாய்ப்பு முகாம்களில், 3 இலட்சத்திற்கும் மேலான இளைஞர்கள் தனியார்துறை நிறுவனங்களில் பணி நியமனங்களை பெற்றுள்ளனர். 2021ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் 91 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மட்டுமே இயங்கி வந்த நிலையில் கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் 41 புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இதன் மூலம், தமிழ்நாட்டில் உள்ள மொத்த அரசு தொழிற்பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை 132 ஆக உயர்ந்துள்ளது.

30. "**எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதான இடம்நோக்கி நடக்கின்றது இந்த வையம்**" என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வரிகளுக்கேற்ப நகர்ப் பகுதிகளில் கிடைக்கும் அனைத்து வசதிகளும் ஊரகப் பகுதி மக்களுக்கும் கிடைத்திட வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு இந்த அரசு செயல்பட்டு வருகிறது. ஊரகப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு பாதுகாப்பான

குடிநீர், தரமான சாலைகள், கான்கிரீட் வீடுகள், நல்ல சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிகளை வழங்குவதிலும், வறுமையைக் குறைத்து வாழ்வாதார வாய்ப்புகளை ஏற்படுத்தி, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை நிலைக்கத்தக்க வகையில் மேம்படுத்துவதிலும் இந்த அரசு கவனம் செலுத்தி வருகிறது.

31. தமிழ்நாட்டினை குடிசைகளே இல்லாத மாநிலமாக உருவாக்கும் உயரிய நோக்கத்துடன் கலைஞர் வீடு வழங்கும் திட்டம் 2010 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, 2030 ஆம் ஆண்டிற்குள் குடிசையில்லாத் தமிழ்நாடு என்னும் இலக்குடன் அறிவிக்கப்பட்ட '**கலைஞர் கனவு இல்லம்' திட்டத்தின்** மூலம் எதிர்வரும் ஆறு ஆண்டுகளில் எட்டு இலட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டு, இதுவரை ஒரு இலட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், ஒரு இலட்சம் வீடுகளின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுமட்டுமன்றி, பல்வேறு அரசுத்

திட்டங்களின் கீழ், 2001ஆம் ஆண்டு வரை கட்டித் தரப்பட்ட 1.16 இலட்சம் வீடுகள் 1,016 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பழுது பார்க்கப்பட்டு, புனரமைக்கப்பட்டுள்ளன.

32. கிராமப் பகுதிகளில் போக்குவரத்து வசதியை மேம்படுத்திடவும், பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவித்திடவும், வேளாண் விளைபொருட்களை நகரங்களுக்கு விரைவாகக் கொண்டு செல்லவும், கிராமச்சாலைகளை தரமாக அமைத்தல் அவசியம் என்பதனைக் கருத்தில் கொண்ட அரசு, '**முதல்வரின் கிராமச்சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தினை**' அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் மூலம், கடந்த 2022-23 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை 20,485 கி.மீ. நீளமுள்ள 15,412 சாலைகள் 8,911 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ளன.

33. கிராமப்புறப் பகுதி மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த அரசு தொடர்ந்து பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி

வருகின்றது. ஒன்றிய, மாநில அரசுகளின் பங்களிப்பில், நாள் ஒன்றிற்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் பாதுகாப்பான குடிநீரை வழங்க வேண்டும் என்ற இலக்குடன் '**உயிர்நீர் இயக்கம்**' (**Jal Jeevan Mission**) செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் உள்ள ஒரு கோடியே பன்னிரெண்டு இலட்சம் வீடுகளுக்கு இதுவரை குடிநீர்க் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. தேசிய அளவில் உயிர்நீர் இயக்கத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தியமைக்கு ஒன்றிய அரசு தமிழ்நாடு அரசுக்கு விருதளித்துப் பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது. இவ்வளவு சிறப்பாக தமிழ்நாடு அரசு செயல்பட்டு இருப்பினும், தமிழ்நாட்டிற்கு இத்திட்டத்தினைச் செயல்படுத்த விடுவிக்க வேண்டிய 3,112 கோடி ரூபாய் நிதியினை ஒன்றிய அரசானது கடந்த ஒன்றரை ஆண்டுகளாக விடுவிக்கவில்லை. மேலும், எந்த ஒரு புதிய திட்டத்திற்கும் அனுமதி அளித்திடவில்லை. எனவே, மிகவும் முக்கியமான இத்திட்டத்திற்குத் தேவையான

நிதி ஆதாரங்களை ஒன்றிய அரசு விரைவில் வழங்கிட தமிழ்நாடு அரசு வலியுறுத்துகிறது.

34. ‘**அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் - II**’-ன் கீழ், ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்திட குறைந்தபட்ச அடிப்படை நிதியாக தலா 30 இலட்சம் ரூபாயும், செயல்திறன் ஊக்க நிதியாக 5 இலட்சம் ரூபாயும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஊரகப் பகுதிகளில் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள 10,417 நூலகங்கள் 168 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ளன.

35. அடுத்தபடியாக இந்த அரசின் மிகப்பெரிய சாதனைகளில் ஒன்றாக வருவாய்த் துறை மூலம், தாங்கள் குடியிருக்கும் மனைக்கு உரிமையின்றி இருந்த இலட்சக்கணக்கான குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கியதன் மூலம் இந்த அரசு அவர்களது வாழ்நாள் கனவை நிறைவேற்றியுள்ளது. சென்னை மற்றும் மாநிலத்தின் நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள

குடியிருப்பு ஆக்கிரமிப்புகளை **ஒரு முறை சிறப்பு வரன்முறைப்படுத்தும் திட்டத்தின்** கீழ் இதுவரை 80,816 தகுதியான பயனாளிகளுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேலும், சென்னை மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில், 1980 களில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் (TNUHDB) மற்றும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் (TNHB) மூலம் செயல்படுத்தப்பட்ட குடியிருப்புத் திட்டங்களில், பட்டா வழங்குவதில் நிலவி வந்த நடைமுறைச் சிக்கல்களுக்குத் தீர்வு காணப்பட்டு, குறைந்த மற்றும் நடுத்தர வருமானமுடைய மக்கள் பயனடையும் வகையில் 1.42 இலட்சம் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. பொதுமக்களுக்கு நிரந்தர வீட்டு வசதி, சம நிலஉரிமை மற்றும் அவர்களின் மாண்பை உறுதிசெய்யும் விதமாக, இந்த அரசு மாநிலம் முழுவதும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் உட்பட விளிம்பு நிலையில் உள்ள மக்களுக்கு, கடந்த மே 2021 முதல் டிசம்பர் 2025 வரை 22.71 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கியுள்ளது. இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிப்பவர்களின் வாழ்வு வளம்பெற

6,311 புதிய வீடுகள் 391 கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள நிலையில், மேலும் 2,742 வீடுகள் 197 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டித் தரும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

36. இந்திய அளவில் விரைவாக நகரமயமாகும் மாநிலங்களில் தமிழ்நாடு முதன்மையானது. பல்வேறு சவால்களையும் வாய்ப்புகளையும் இந்த நகரமயமாதல் உருவாக்குகிறது. எனவே, நகர்ப்புற உட்கட்டமைப்பு, குடிநீர் வழங்கல், திடக்கழிவு மேலாண்மை, போக்குவரத்து, வீட்டுவசதி, சுற்றுச்சூழல் பேணுதல் ஆகியவற்றுக்கு அதிமுக்கியத்துவம் கொடுத்து அவற்றிற்கான திட்டங்களை வடிவமைத்துச் செயல்படுத்துவது அவசியமாகிறது.

37. தமிழ்நாடெங்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் வகையில் 87 குடிநீர்த் திட்டங்கள் 15,591 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டு, ஒரு கோடியே 65 இலட்சம் மக்கள் பயனடைந்து

வருகின்றனர். சென்னை பெருநகரக் குடிநீர் வழங்கல் வாரியத்தின் சார்பில், கடந்த 43 ஆண்டுகளில் முதல்முறையாக நாளொன்றுக்கு சராசரியாக 1,000 மில்லியன் லிட்டர் குடிநீர் 2021 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் விநியோகிக்கப்பட்டு வருகிறது. பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்ப சென்னை மாநகரின் குடிநீர்த் தேவையை மேலும் நிறைவு செய்திட, கோவளம் வடிநிலப் பகுதியில் 342 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாமல்லன் நீர்த்தேக்கத்தினை அமைப்பதற்கான பணிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டியுள்ளார். இதன் மூலம் நாளொன்றுக்கு 170 மில்லியன் லிட்டர் குடிநீர் கூடுதலாக விநியோகிக்க முடியும்.

38. '**கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்**' கீழ் ஆண்டுக்கு ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2,504 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5,649 எண்ணிக்கையிலான பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் தெரு விளக்குகள், சாலை மேம்பாடு,

சமுதாயக் கூடங்கள், சந்தைகள், நூலகங்கள், பூங்காக்கள், எரிவாயு தகன மேடைகள் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

39. '**நமக்கு நாமே திட்டத்தின்**' கீழ், கடந்த ஐந்து ஆண்டுகளில் 575 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு பொதுமக்கள் பங்களிப்புடன் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் அதிகளவில் பயன்பெறும் வகையில், பொதுமக்கள் பங்களிப்புத் தொகை மொத்த மதிப்பீட்டில் ஐந்தில் ஒரு பகுதியாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தூய்மைப் பணியாளர்களைத் தொழில் முனைவோராக மாற்றும் திட்டத்தின் கீழ், அவர்களின் சமூக-பொருளாதார மேம்பாட்டுக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

40. பொதுப் போக்குவரத்தினை மேம்படுத்திடும் வகையில் கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் 6,871 புதிய பேருந்துகள் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

மேலும், 5,216 புதிய பேருந்துகள் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன. இதுமட்டுமன்றி, 3,673 பேருந்துகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. காற்று மாசுபடுவதையும் கார்பன் தடங்களையும் குறைத்திடும் முன்முயற்சியாக, தமிழ்நாட்டின் வரலாற்றில் முதன்முறையாக 380 மின் பேருந்துகள் 288 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

41. சமூகநீதி நோக்குடன் மக்கள் நலம் நாடும் அரசாகச் செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசு, மக்களின் நல்வாழ்வை உறுதிப்படுத்துவதில் சிறப்புக் கவனம் செலுத்திவருகிறது. சென்னை கிண்டியில் தொடங்கப்பட்டுள்ள **கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை**, ஆயிரம் படுக்கைகள், 15 அறுவை சிகிச்சை அரங்குகளுடன், சென்னையின் அடையாளங்களில் ஒன்றாக மாறியுள்ளது. மேலும், காஞ்சிபுரம் மாவட்டம் காரப்பேட்டையில் உள்ள அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருந்துவமனையானது

750 படுக்கை வசதிகளுடன் 6.66 இலட்சம் சதுரஅடி பரப்பளவில் ஒரு ஒப்புயர்வு மையமாக மேம்படுத்தப்பட்டு வருகிறது.

42. மக்கள் நலம் காக்கும், உயிர் காக்கும் இவ்வரசின் பல திட்டங்கள் பாராட்டுக்குரியவை. '**முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில்**', பயனாளிகளுக்கான ஆண்டு வருமானம் 1.2 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டு, 5 இலட்சம் ரூபாய் வரையில் மருத்துவக் காப்பீடு ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 2,053 சிகிச்சை முறைகள் அங்கீகரிக்கப்பட்டு, கடந்த ஐந்து ஆண்டுகளில் 6,769 கோடி ரூபாய் மதிப்பிலான காப்பீட்டுத் தொகை அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தால் 1.45 கோடி குடும்பங்கள் பயனடைந்து வருகின்றன. '**இன்னுயிர் காப்போம்- நம்மைக் காக்கும் 48**' திட்டத்தின் மூலம், விபத்தால் பாதிக்கப்பட்ட நான்கு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் நலம் பெற்றுள்ளனர்.

43. நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் எனும் வள்ளுவத்தின் வழிகாட்டலின்படி செவ்வனே செயல்படுத்தப்பட்டு வருகிறது. '**மக்களைத் தேடி மருத்துவம்**' திட்டத்தின் கீழ் 2.51 கோடி பயனாளிகள் முதன்முறை சேவைகளைப் பெற்றுள்ளனர். பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பெண் சுகாதார தன்னார்வலர்கள் மூலம், அவர்களுக்கு தொடர் கவனிப்பும் அளிக்கப்பட்டு வருகிறது. நோய்களை தொடக்க நிலையிலேயே கண்டறிந்து, உரிய நேரத்தில் சிகிச்சை எடுக்க உதவும் நோக்கில் தொடங்கப்பட்ட '**நலம் காக்கும் ஸ்டாலின்**' திட்டத்தின் கீழ், தமிழ்நாடு முழுவதும் 986 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, இதன் மூலம் 15 இலட்சத்திற்கும் மேலான மக்கள் உயர்சிறப்பு மருத்துவச் சேவைகளைப் பெற்றுப் பயனடைந்து வருகின்றனர்.

44. குழந்தைகள் முதல் முதியோர் வரை அனைவரின் வாழ்க்கைத் தரத்தினையும் மேம்படுத்தி, கடைக்கோடித் தமிழரின் முகங்களிலும் புன்னகையை

மலரச் செய்திடும் நோக்கில் சமத்துவ சமூகநீதிக் கொள்கைகளை கடைப்பிடித்து வரும் நமது அரசு மாற்றுத்திறனாளிகளின் நலன் காத்திட பல்வேறு புரட்சிகரமான திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்தி வருகிறது.

45. மாற்றுத் திறன் கொண்டோரை மாற்றுத்திறனாளி என்னும் கண்ணியமான சொல்லால் குறிப்பிட வேண்டும் என்பதை அறிவுறுத்தியதுடன் மாற்றுத்திறனாளிகளுக்கான பல்வேறு நலத் திட்டங்களை அறிமுகப்படுத்திய முத்தமிழறிஞர் கலைஞரின் வழியில் நடைபோடும் இந்த அரசு, மாற்றுத்திறன் கொண்டோரின் குறைபாடுகளை தொடக்க நிலையிலேயே கண்டறிந்து, உரிய சிகிச்சை மற்றும் திறன் பயிற்சி அளிப்பதன் மூலம், அவர்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் '**மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் திட்டத்தினை**' (TN-RIGHTS) செயல்படுத்தி வருகிறது. மாற்றுத்திறனாளிகளுக்குச் சுயதொழில் தொடங்க

கடனுதவி வழங்கப்படுகிறது. முதுகுத் தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்கள், அறிவுசார் குறைபாடுடையோர், மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோருக்காகச் சிறப்பு இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன.

46. மாற்றுத்திறனாளிகள் வாழ்வில் மகுடம் சூட்டும் வகையில், தமிழ்நாட்டின் உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகளை நியமன முறையில் உறுப்பினராக்கும் வகையில் இந்த அரசு சட்டத் திருத்தம் மேற்கொண்டுள்ளது. இதன்மூலம், 3,631 மாற்றுத்திறனாளிகள், ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உறுப்பினர்களாகி, தமிழ்நாட்டின் வளர்ச்சியை வடிவமைத்திடும் அரிய வாய்ப்பைப் பெற்றுள்ளனர். '**எல்லோருக்கும் எல்லாம்**' என்பதே இந்த அரசின் உயிர்நாடி என்பதை இந்நடவடிக்கை அழுத்தந்திருத்தமாக வெளிப்படுத்தியுள்ளது. மாற்றுத்திறனாளிகளுக்கான மாதாந்திர உதவித்தொகையினை இந்த அரசு ஆயிரம் ரூபாயிலிருந்து ஆயிரத்து ஐநூறு ரூபாயாக

அதிகரித்துள்ளது. இதன் மூலம், 5.88 இலட்சம் மாற்றுத்திறனாளிகள் பயனடைந்து வருகின்றனர். மேலும், கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளின் மாதாந்திர பராமரிப்புத் தொகையினை ஆயிரத்து ஐநூறு ரூபாயிலிருந்து இரண்டாயிரம் ரூபாயாக நமது அரசு உயர்த்தியுள்ளது. இதன் மூலம் 2.58 இலட்சம் மாற்றுத்திறனாளிகள் பயனடைந்து வருகின்றனர்.

47. தொழிற்துறையில் கடந்த ஐந்து ஆண்டுகளில் சுமார் 12.16 இலட்சம் கோடி ரூபாய்க்கும் மேலான முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, மாநிலமெங்கும் தொழிற் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பல்வேறு முன்னணி தொழில் நிறுவனங்களுடன் இதுவரை 1,176 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால் உருவாக்கப்படும் வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கை சுமார் 36 இலட்சம். 2025 ஆம் ஆண்டில் மட்டும் 14.65 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான மின்னணுவியல் பொருட்கள் தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

தேசிய அளவிலான மின்னணுவியல் ஏற்றுமதியில் தமிழ்நாட்டின் பங்கு 41.2 சதவீதமாக உயர்ந்து சாதனை படைத்துள்ளது.

48. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையில், சென்னையில் கடந்த 2000 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட டைடல் பூங்கா, தகவல் தொழில்நுட்பத் துறையில் தமிழ்நாட்டிற்கான உயரிய இடத்தை உறுதி செய்தது. அதே வழியில் இந்த அரசு, திருவள்ளூர் மாவட்டம் பட்டாபிராமில் ஒரு டைடல் பூங்காவையும், தஞ்சாவூர், சேலம், விழுப்புரம், தூத்துக்குடி, வேலூர், திருப்பூர் ஆகிய இடங்களில் மினி டைடல் பூங்காக்களையும் நிறுவியுள்ளது. மேலும், மதுரை, திருச்சி, ஓசூர், காரைக்குடி, விருதுநகர், திருநெல்வேலி, கன்னியாகுமரி, ஈரோடு, நாமக்கல், திருவண்ணாமலை, கரூர், உதகமண்டலம், நாகப்பட்டினம் மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களில் புதிய டைடல் மற்றும் மினி டைடல் பூங்காக்கள் நிறுவப்பட உள்ளன. இதன் மூலம், தமிழ்நாடு முழுவதும் இத்தொழில் பரவி,

நம் மாநிலம் சமச்சீரான வளர்ச்சியை எட்டும் நிலை உருவாகியுள்ளது.

49. சென்னையில் 83 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிதி நுட்ப நகரம் (Fin Tech City) ஒன்று உருவாக்கப்பட்டு வருகிறது. தொழில்துறையை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கொள்கை, தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் கொள்கை என 18 புதிய துறைசார் கொள்கைகளை இந்த அரசு வெளியிட்டுள்ளது.

50. தமிழ்நாட்டில் சுமார் 40 இலட்சம் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இவை மாநிலத்தின் மொத்த தொழிற்சாலை உற்பத்தியில் மிக முக்கியப் பங்கினை வகிக்கின்றன. தமிழ்நாடு வர்த்தக வரவுகள் தள்ளுபடி முறை எனும் திட்டம், கலைஞர் கைவினைத் திட்டம் உள்ளிட்ட பல திட்டங்கள் மூலம் குறு, சிறு, நடுத்தரத் தொழில்களை ஊக்குவிக்கும் பல்வேறு நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்கக் கொள்கையும் வெளியிடப்பட்டுள்ளது. உலக புத்தொழில் மாநாடு, தொழிற் பயிற்சி முகாம்கள் எனப் பல முன்னெடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

51. தமிழ்நாட்டில் உயர்ந்து வரும் மின்தேவையை நிறைவு செய்திடும் நோக்கில் உடன்குடி மற்றும் எண்ணூர் அனல்மின் நிலையங்களில் 2,640 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட புதிய அலகுகள் அமைக்கும் பணிகள் நிறைவுபெறும் தருவாயில் உள்ளன. மேலும், 520 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட புனல் மின் நிலையங்கள், மின்கலன் சேமிப்பு அமைப்புகள் மற்றும் நீரேற்று மின் திட்டங்கள் பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன. மேலும், எண்ணூர் அனல்மின் நிலைய விரிவாக்கத் திட்டம், உடன்குடி அனல் மின் திட்டம் நிலை II மற்றும் III மற்றும் தூத்துக்குடி அனல் மின் திட்டம் விரிவாக்கம் ஆகியவையும் செயல்படுத்தப்பட உள்ளன. இவற்றின்

மூலம், வரும் ஆண்டுகளில் தமிழ்நாட்டின் மின் உற்பத்தித் திறன் 7,000 மெகா வாட்டிற்கும் அதிகமாக உயரும். இது, மாநிலத்தின் தொழில்துறை வளர்ச்சிக்குப் பேருதவியாக அமையப்பெறும்.

52. நமது அரசு பொறுப்பேற்றதன் பின், மேட்டூர் அணையினை பாசன வசதிக்காக ஒவ்வொரு ஆண்டும் குறித்த நேரத்தில் திறக்கப்படுவதோடு, கடந்த 4 ஆண்டுகளில் 459 கோடி ரூபாய் செலவில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால், கடைமடை வரை நீர் சேர்ந்து வேளாண் உற்பத்தியினை அதிகரித்து, விவசாயிகளின் வாழ்வினை செம்மைப்படுத்தியுள்ளது. நீர் மேலாண்மையில் முன்னிலை வகிக்கும் தமிழ்நாட்டில் கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும், 121 தடுப்பணைகள் மற்றும் 101 அணைக்கட்டுகள் ஆகியவை சுமார் 2,086 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ளன. இவை மட்டுமன்றி, அத்திக்கடவு-அவிநாசி திட்டத்தினை செயல்பாட்டிற்கு கொண்டு வந்ததன் மூலம், இதுவரை 1,045 நீர்நிலைகள் நிரம்பியுள்ளன. இதுமட்டுமல்லாது,

பல ஆண்டுகளாக முடிக்கப்படாமல் இருந்த தாமிரபரணி-கருமேனியாறு-நம்பியாறு திட்டத்தின் பணிகள் முடிக்கப்பட்டு தாமிரபரணியிலிருந்து மொத்தமாக 9.38 டி.எம்.சி. நீரானது திசையன்விளை மற்றும் சாத்தான்குளம் பகுதிகளில் உள்ள பல கிராமங்களுக்குக் கொண்டு சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம், கூடுதலாக 56,933 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்றுள்ளன. மாநிலங்களுக்கு இடையே பாயும் நதிகளின் நீரில் தனது நியாயமான பங்கினைப் பெறுவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மாநில அரசு எடுத்து வருகிறது. நமக்கே உரிய நியாயமான நீர்ப் பங்கீட்டில் நாம் ஒருபோதும் சமரசம் செய்துகொள்ளமாட்டோம்.

53. வேளாண் உற்பத்தியையும், உணவுத் தன்னிறைவையும் முதன்மை நோக்கமாகக் கொண்டிருந்த வேளாண் துறை, திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றுக் கொண்டது முதல், வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறையாக தற்போது செயல்பட்டு வருகிறது.

2021-22 ஆம் நிதியாண்டு முதல் வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறைக்கென்று தனி நிதிநிலை அறிக்கை அளிக்கப்பட்டு வருகிறது. கல்வி, ஆராய்ச்சி தொடங்கி சந்தைப்படுத்தல் வரையிலும் வேளாண்மையுடன் தொடர்புடைய அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்த வகையில் செயல்படுவதற்கான விரிவான செயல்திட்டமாக வேளாண் நிதிநிலை அறிக்கைகள் அமைந்துள்ளன.

54. பண்பாட்டில் மட்டுமன்றி, வேளாண்மையிலும் தமிழ்நிலம் மரபுகளையும், பன்மைத்துவத்தையும் பேணிப் பாதுகாத்து வருகிறது. ஒருபுறம் தமிழ்நாட்டின் பாசன வேளாண்மை நவீனமடைவதற்கு தனித் திட்டங்கள் பல செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்றால், மறுபுறம் மரபுசார் நெல் இரகங்களைப் பாதுகாக்க மானியத்துடன் விதை நெல்லும் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. மண்ணுக்கேற்ற விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையில் 25 மாவட்டங்களில்

சிறுதானிய இயக்கம் முடுக்கிவிடப்பட்டுள்ளது. சிறுதானியங்களுக்கு அளிக்கப்பட்டு வரும் சிறப்புக் கவனம் காரணமாக, சிறுதானியங்களின் சாகுபடிப் பரப்பு கணிசமாக அதிகரித்துள்ளது.

55. சூழலியல் நோக்கோடு உயிர்ம வேளாண்மையையும், இயற்கை இடுபொருள் பயன்பாட்டையும் இந்த அரசு தொடர்ந்து ஊக்குவித்து வருகிறது. '**முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம்**', ஒரு அரசுத் திட்டமாக மட்டுமன்றி ஒரு சூழலியல் இயக்கமாகவே மாறியுள்ளது. கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் விவசாயக் குழுக்களுக்குத் தேவையான கிணறு வசதிகள், உலர்கள வசதியுடன் கூடிய தரம் பிரிப்புக் கூடங்கள் ஆகியவை ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. 125 உழவர் சந்தைகள் புனரமைக்கப்பட்டு, புதிதாக 14 உழவர் சந்தைகள் தொடங்கப்பட்டு, முத்தமிழறிஞர் கலைஞரின் கனவுத் திட்டங்களில் ஒன்றான '**உழவர் சந்தை**' முன்பிருந்த எழுச்சியை மீண்டும்

பெற்றுள்ளது. சராசரியாக, நாள்தோறும் 10 கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை நடைபெற்று, எட்டாயிரம் விவசாயிகளும், மூன்று இலட்சத்திற்கும் அதிகமான நுகர்வோரும் பயன்பெறுகின்றனர். 397 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு மூலதன உதவி, கடன் உத்தரவாதம், சிறப்பு அங்காடிகள், தொழில்நுட்பப் பயிற்சிகள், வேளாண் வணிகத் திருவிழா என்று பல்வேறு நிலைகளில் ஆக்கமும் ஊக்கமும் அளிக்கப்பட்டு வருகின்றன.

56. நெல் சாகுபடிப் பரப்பை அதிகரிக்க - டெல்டா அல்லாத மாவட்டங்களில் சிறப்புத் தொகுப்புத் திட்டம் மற்றும் டெல்டா பகுதிகளில் குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டம் ஆகியவை இந்த அரசு வேளாண் வளர்ச்சிக்கென அறிமுகப்படுத்திய சில சிறப்புத் திட்டங்கள். இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் இதுவரை 1.83 இலட்சம் புதிய பாசன மின் இணைப்புகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும், கட்டணமில்லா வேளாண் மின்சாரம் வழங்கிட

கடந்த ஐந்து ஆண்டுகளில் 26,723 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

57. பசுமைப் போர்வை போர்த்திட, சென்னை டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலையில் கலைஞர் நூற்றாண்டுப் பூங்காவை இந்த அரசு அமைத்துள்ளது. மேலும், சென்னை - கிண்டியில் 118 ஏக்கர் பரப்பளவில் பல்வேறு இயற்கை சார்ந்த அனுபவங்களை அளிக்கும் வகையில் உலகத்தரம் வாய்ந்த சுற்றுச்சூழல் பூங்கா அமைக்கப்பட உள்ளது. இவை மட்டுமன்றி, மாமல்லபுரத்தில் நந்தவனம் மரபுசார் பூங்காவும், உதகமண்டலம் ரேஸ்கோர்ஸ் மைதானத்தில் ஒரு புதிய பூங்காவும் அமைக்கப் பெறவுள்ளன. இவையாவும் தமிழ்நாடெங்கும் பசுமைப் பரப்பை விரித்திடும் உயரிய இலக்கினை அடைய உதவிகரமாக இருக்கும்.

58. தொழில் வளாகங்களிலும், நகர்ப்புற நிலப் பகுதிகளிலும், உள்ளூர் தாவரங்கள், காற்றை சுத்திகரிக்கும் மரங்கள், மாசுகளைக் குறைக்கும் மர வகைகளை

உள்ளடக்கிய பசுமை வளையங்களை உருவாக்கி அறிவியல் அடிப்படையில் மறுவனமாக்கும் திட்டங்களை தமிழ்நாடு செயல்படுத்தி வருகிறது. பசுமை தமிழ்நாடு இயக்கம் மூலம் வனம் மற்றும் நகர்ப்புறப் பகுதிகள், கடலோர மற்றும் தொழில் வளாகப் பகுதிகளில் அதிக அளவில் மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டுகளில், 13,500 ஹெக்டேர் பரப்பு நிலம் புதிய காப்பு வனங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளதோடு, அலையாத்திக் காடுகள் சீரமைப்பு, புயல், வெள்ளம் மற்றும் கடல் அரிப்புகளைத் தடுக்கும் உயிர் அரண்களை அமைத்து வருவதின் மூலம் நாட்டிலேயே முன்னோடி மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. 2,490 ஹெக்டேர் பரப்பில் அலையாத்திக் காடுகள் உருவாக்கப்பட்டுள்ளதோடு 1,243 ஹெக்டேர் பரப்பளவிலான அலையாத்திக் காடுகள் மறுசீரமைக்கப்பட்டுள்ளன. இந்தியாவிலேயே முதன்முறையாக 500 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம், உயிர்ப் பன்மை பாதுகாப்பை ஒருங்கிணைத்தல்,

காலநிலை மீள்திறன் மற்றும் வாழ்வாதாரங்களை உருவாக்குதல் ஆகியவற்றிற்கு ஆதாரமாக விளங்குகிறது.

59. கடந்த நான்கு ஆண்டுகளில் மூன்று வனவிலங்கு சரணாலயங்கள், மூன்று பறவைகள் சரணாலயங்கள் மற்றும் ஒரு யானைகள் காப்பகத்தையும் இந்த அரசு அறிவிக்கை செய்ததன் மூலம் 2.86 இலட்சம் ஹெக்டேர் நிலப் பரப்பு மேம்படுத்தப்பட்ட சட்டப் பாதுகாப்பினைப் பெற்றுள்ளது. மேலும், பாக் வளைகுடாவில் 44,830 ஹெக்டேர் நீர்ப் பரப்பு கடல்பசு காப்பகமாக அறிவிக்கை செய்யப்பட்டதன் மூலம் கடல் பல்லுயிர்ப் பாதுகாப்பு வலுப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளுடன் சேர்த்து மாநிலத்தின் மொத்த நிலப்பரப்பில் மரம் மற்றும் வனப் பரப்பினை தற்போதுள்ள 24.47 சதவீதத்திலிருந்து தேசிய இலக்கான 33 சதவீதமாக உயர்த்த பல்வேறு தொடர் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

60. வைகை நதி நாகரிகத்தை உலகுக்கு எடுத்துக்காட்டும் வகையில் கீழடியில் அமைக்கப்பட்டுள்ள உலகத்தரம் வாய்ந்த அருங்காட்சியகத்தினை நாள்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் பார்வையிட்டு வருகின்றனர். மேலும், ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை அகழாய்வுகளில் கண்டெடுக்கப்பட்ட அரிய பொருட்களைக் காட்சிப்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்ட பொருநை அருங்காட்சியகம், உலகளவில் பெரும் பாராட்டினைப் பெற்றுள்ளது. 'சரித்திரம் தேர்ச்சிகொள்' என்ற மகாகவி பாரதியின் வாக்கு மக்கள் மனங்களில் உணர்வுப்பூர்வமாக வெளிப்பட்டு வருவதைப் பார்க்கிறோம்.

61. ஆயிரம் ஆண்டுகள் பழமையான திருக்கோயில்களை புனரமைத்துப் பாதுகாத்திடும் வகையில், கடந்த நான்கு ஆண்டுகளில் 425 கோடி ரூபாய் அரசு நிதி ஒதுக்கீட்டில், 352 திருக்கோயில்களில் தொன்மை மாறாமல் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு இதுவரை 76 திருக்கோயில்களில் திருக்குடமுழுக்குகள்

நடைபெற்றுள்ளன. மேலும், தமிழ்நாடெங்கும் 8,057 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 28,229 திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. 3,956 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு திருக் குடமுழுக்குகள் நடத்தப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த பெருந்திட்ட வரைவின் கீழ் 19 முக்கிய திருக்கோயில்களில் 1,770 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருப்பணிகள் மற்றும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. திருக்கோயில்களுக்குச் சொந்தமான 8,262 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 8,037 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளது மிகவும் பாராட்டுக்குரியது.

62. சிறுபான்மையின மாணவர்கள் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி பயில கல்வி உதவித்தொகை வழங்கும் புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பாரம்பரியமிக்க தேவாலயங்கள் மற்றும் மசூதிகளை அவற்றின் தொன்மை மாறாமல் புதுப்பிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், ஹஜ் பயணிகளின் நலனுக்காக சென்னையில் 39 கோடி ரூபாய் மதிப்பில் ஹஜ் இல்லம் கட்டுமானப் பணிக்கான அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் தொடங்கியுள்ளன.

63. மக்களின் கோரிக்கை மனுக்களை உடனுக்குடன் தீர்த்து வைப்பதை இந்த அரசு பொறுப்பேற்ற முதல் நாளிலிருந்தே முதன்மைக் கடமையாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. முதல்வரின் முகவரி எனும் துறை வாயிலாக இணையதளம், கைப்பேசிச் செயலி மற்றும் கட்டணமில்லா தொலைபேசி எண் 1100 உள்ளிட்ட பல்வேறு வழிகளில் பெறப்படும் மனுக்களுக்குத் தனித்துவமான அடையாள எண் வழங்கப்பட்டு, மனுதாரர்களுக்கு அவர்கள் மனுவின் நிலையினைத் தெரிந்துகொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

64. பொதுமக்கள் அதிகம் நாடும் சேவைகளை அவர்கள் இருப்பிடத்திற்கு அருகாமையிலேயே

வழங்கிடும் வகையில், நவம்பர் 2023 முதல் மார்ச் 2025 வரை '**மக்களுடன் முதல்வர்**' திட்டம் மூன்று கட்டங்களாகச் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், மொத்தம் 4,835 முகாம்கள் நடத்தப்பட்டு, 23.49 இலட்சம் மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. இத்திட்டம் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றதைத் தொடர்ந்து, '**உங்களுடன் ஸ்டாலின்**' என்ற புதிய திட்டத்தில், ஜூலை 15, 2025 முதல் நவம்பர் மாதம் 2025 வரை, 10,000 முகாம்கள் நடத்தப்பட்டன. இந்த சிறப்புத் திட்டத்தின் கீழ், ஊரகப் பகுதிகளில் 15 துறைகளைச் சேர்ந்த 46 சேவைகளும், நகர்ப்புறப் பகுதிகளில் 13 துறைகளை சேர்ந்த 43 சேவைகளும் வழங்கப்பட்டன. இத்திட்டத்தில், 38.53 இலட்சம் மனுக்கள் பெறப்பட்டு, இதுவரை 36.62 இலட்சம் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளன. மக்கள் கோரிக்கைகளுக்கு உடனடித் தீர்வு காணும் சூழலை உருவாக்கி, நாட்டிற்கே மக்கள் நல அரசிற்கான இலக்கணமாக இவ்வரசு திகழ்கிறது.

65. அரசுப் பணியாளர்களின் நலன் காப்பதில் எப்போதும் அக்கறையுடன் செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசானது, அவர்களின் இருபத்து இரண்டாண்டு கால கோரிக்கையை நிறைவேற்றும் விதமாக, அவர்களின் கடைசி மாத ஊதியத்தில் 50 சதவீதம் உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியமாகவும், தகுதிவாய்ந்த குடும்ப உறுப்பினர்களுக்கு ஓய்வூதியதாரர்கள் பெற்று வந்த ஓய்வூதியத்தில் 60 சதவீதத்தை குடும்ப ஓய்வூதியமாகவும், ஆண்டுதோறும் பணியிலுள்ள அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படுவதற்கு இணையான அகவிலைப்படி உயர்வு மற்றும் 25 இலட்சம் ரூபாய்க்கு மிகாமல் பணிக்கொடை வழங்குதல் உட்பட பல்வேறு அம்சங்களுடன், பழைய ஓய்வூதியத் திட்டத்திற்கு நிகரான '**தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தினை**' (TAPS) அரசு செயல்படுத்தியுள்ளது.

மேற்கூறிய ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதால், ஓய்வூதிய நிதியத்திற்கு முதற்கட்டமாக ஒருமுறை பங்களிப்பாக 13,000 கோடி ரூபாயும், மேலும்,

ஆண்டுதோறும் அரசின் பங்களிப்பாக கூடுதலாக 11,000 கோடி ரூபாய் நிதியையும் தமிழ்நாடு அரசு வழங்கும். தமிழ்நாடு அரசு சந்தித்து வரும் கடுமையான நிதி நெருக்கடியிலும், அரசுப் பணியாளர்களின் நலன்களைக் காத்திடும் பொருட்டு, இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த அரசாணை வெளியிடப்பட்டுள்ளதை நான் மனமாரப் பாராட்டுகிறேன். அதேபோன்று சிறப்புக் காலமுறை ஊதிய முறையில் பணியாற்றி வரும் பணியாளர்களின் சிறப்பு ஓய்வூதியம் குறித்த பல்வேறு கோரிக்கைகளை அரசு கனிவுடன் பரிசீலித்து உரிய ஆணைகளை விரைவில் வெளியிடும் என்பதை மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

66. ஒன்றிய அரசு எதிர்மறை மனப்பான்மையுடன் மாநில அரசை அணுகி வருவதால், மாநில அரசிற்கு உரிய திட்டங்களுக்கான அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடுகள் தொடர்ந்து நிராகரிக்கப்பட்டு வருவது கவலைக்குரியது. தமிழ்நாடு அரசு செயல்படுத்திவரும் பல்வேறு திட்டங்களுக்கு, மாநில

அரசின் கொள்கைகளுக்கு எதிரான நிபந்தனைகளை ஒன்றிய அரசு விதித்து, அத்திட்டங்களைச் செயல்படுத்துவதில் பெருந்தடைகளை உருவாக்குவது மட்டுமல்லாமல், அத்திட்டங்கள் முற்றிலும் முடங்கும் சூழ்நிலையையும் உருவாக்கியுள்ளது. இது, மாநிலத்தின் வளர்ச்சிக்குப் பெருந்தடையாக உள்ளது.

67. மிக்ஜாம், ஃபெஞ்சல் புயல்கள் போன்ற இயற்கைப் பேரிடர்களால் தமிழ்நாடு பெரும் சேதத்தை சந்தித்த நேரங்களில், மாநிலத்தின் நிவாரண உதவி கோரிக்கைகள் முழுமையாக ஏற்கப்படாமல் மிகச் சொற்பமான தொகையை மட்டுமே ஒன்றிய அரசு விடுவித்தது ஏமாற்றம் தருகிறது. ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தின் (Samagra Shiksha Abhiyaan) ஆண்டுப் பணித் திட்டத்திற்கு, திட்ட ஒப்பளிப்பு வாரியம் (PAB) அனுமதித்த தொகையை ஒன்றிய அரசு முழுமையாக விடுவிக்காமல் உள்ளது. 3,548 கோடி ரூபாய் நிதியை ஒன்றிய அரசு விடுவிக்காததன் காரணமாக,

அத்திட்டங்களுக்குரிய முழுச் செலவையும் மாநில அரசே ஏற்றுள்ளது.

68. சரக்கு மற்றும் சேவை வரி விகிதங்களின் சீரமைப்பு காரணமாக மாநிலங்கள் பெருமளவிலான வரி வருவாய் இழப்பினைச் சந்தித்து வரும் வேளையில், மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கக் கூடிய வரி வருவாயை மடைமாற்றும் வகையில், ஒன்றிய அரசானது மேல்வரி மற்றும் கூடுதல் கட்டணங்களை விதிப்பதைத் தவிர்த்திட நமது அரசு வலியுறுத்துகிறது.

69. நாடெங்கும் ஊரகப் பகுதிகளில் பல கோடி ஏழை எளியோருக்கு, குறிப்பாக பெண்கள் மற்றும் ஆதிதிராவிட மக்களுக்கு ஊதிய வேலையை உறுதி செய்யும் '**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்**' அடிப்படை நோக்கத்தினை சிதைத்திடும் வகையில், வளர்ச்சியடைந்த இந்தியா- ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்கம் - ஊரகம் (VB-G-RAM-G) என்ற புதிய திட்டத்தினை

ஒன்றிய அரசு அண்மையில் அறிவித்துள்ளது. ஊரகப் பகுதிகளில் வாழும் ஏழை மக்களின் சமூகப் பாதுகாப்பினை உறுதிசெய்திடும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் மூலம் ஊரகப் பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகள், இயற்கை வளங்கள் பாதுகாப்பு, பசுமைப்படுத்துதல், நீர்ப்பிடிப்பு மேலாண்மை போன்ற எண்ணற்ற பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு, நாட்டிலேயே இத்திட்டச் செயலாக்கத்திற்கான விருதுகளை தமிழ்நாடு தொடர்ந்து பெற்று வந்தது குறிப்பிடத்தக்கது.

70. இத்திட்டத்தினை நீக்கியது கிராமப்புறப் பகுதிகளின் வளர்ச்சியைத் தடுப்பது மட்டுமன்றி மாநில அரசின் நிதி நெருக்கடியினை மேலும் அதிகரிப்பதாக உள்ளது. VB-G-RAM-G என்ற புதிய திட்டத்தினால் தமிழ்நாட்டின் நிதிச்சுமை சுமார் 5,000 கோடி ரூபாய் வரை மேலும் அதிகரிக்கும். ஏற்கெனவே, பல்வேறு ஒன்றிய அரசின் திட்டங்களுக்கு மாநில அரசின் பங்குத்தொகையை அதிகரித்ததன்

வாயிலாக, மாநில அரசின் திட்டங்கள் எதனையும் முறையாக நடைமுறைப்படுத்த இயலாமல் நெருக்கடி தரும் ஒன்றிய அரசின் காழ்ப்புணர்ச்சியின் ஒரு அங்கமாகவே இப்புதிய திட்டத்தினைக் கருத வேண்டியுள்ளது. எனவே, இப்புதிய திட்டத்தினைத் திரும்பப் பெற்று, “**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்கு**” மேலும் கூடுதல் நிதி ஆதாரங்களை ஒதுக்கி அதை வெற்றிகரமாக செயல்படுத்த ஒன்றிய அரசு முன்வர வேண்டும்.

71. தமிழ்நாடு அரசின் திட்டங்களில் முத்தாய்ப்பானதாக கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் அமைந்தது என்றால், மகளிர் விடியல் பயணத் திட்டம், புதுமைப் பெண் திட்டம், பத்திரப் பதிவில் பெண்களுக்கு கட்டணச் சலுகை என மகளிர் மேம்பாட்டிற்காக இந்த அரசு அறிமுகப்படுத்திய திட்டங்களை அடுக்கிக் கொண்டே செல்லலாம். இவ்வாறாக, மகளிர் நலன் மற்றும் மேம்பாட்டிற்காக இந்த அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு நலத் திட்டங்களில் பெரும்பான்மையானவை

மாநிலத்தின் சொந்த நிதியிலிருந்து மட்டுமே செயல்படுத்தப்படுபவை என்பதும் இந்த அரசிற்கு மேலும் பெருமை சேர்க்கும் ஒன்றாகும்.

72. தமிழ்நாட்டு மீனவர்களின் பாதுகாப்பிற்கு இந்த அரசு அதிக முன்னுரிமை அளித்து வருகிறது. பாக் வளைகுடாவின் பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகளில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் போது, வழி தவறி இலங்கையின் கடல் எல்லைக்குள் நுழைய நேரிடும் நிகழ்வுகளில் சர்வதேச எல்லையைக் கடப்பதாகக் கூறி, இலங்கை கடற்படையினரால், தமிழ்நாட்டு மீனவர்கள் கைது செய்யப்படுகின்றனர். பின்னர், மாநில மற்றும் ஒன்றிய அரசுகளின் நடவடிக்கைகளால் அவர்கள் விடுவிக்கப்பட்டாலும், இடைப்பட்ட காலத்தில் அவர்கள் சிறைவாசத்தை அனுபவிக்கும் நிலையும், மீனவர்கள் விடுவிக்கப்பட்டாலும் அவர்களின் படகுகள் விடுவிக்கப்படாத நிலையும் நிலவுவதால் அவர்களின் வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்படுகின்றது. இந்த நீண்டகாலப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான

பேச்சுவார்த்தை நடத்திட கூட்டுப் பணிக் குழுவை மீண்டும் உயிர்ப்பித்திடவும், இருதரப்பும் ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலையான தீர்வை எட்டிடவும் ஒருங்கிணைந்த முயற்சிகளை ஒன்றிய அரசு மேற்கொள்ள வேண்டும் என இந்த அரசு வலியுறுத்துகிறது.

73. பல்வேறு நிதி நெருக்கடிகளுக்கு இடையே, ஒன்றிய அரசு உறுதியளித்தபடி, உரிய நேரத்தில் தனது பங்கை விடுவிக்கும் என எதிர்பார்த்து, சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகள் தடைபடாமல் நடைபெறுவதற்காக, மாநில அரசே தனது சொந்த நிதியிலிருந்து திட்டத்திற்குத் தேவையான நிதியை உரிய நேரத்தில் முன்னதாக விடுவித்து வந்தது. ஆனால், ஒன்றிய அரசு தனது பங்கினை விடுவிப்பதில் ஏற்பட்ட காலதாமதத்தால், கடந்த இரண்டாண்டுகளாக மாநிலத்தில் மற்ற பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதில் பாதிப்பு ஏற்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொடர் கோரிக்கைகளின் அடிப்படையில் ஒன்றிய அரசு சென்னை மெட்ரோ இரயில் இரண்டாம் கட்ட

திட்டத்திற்கு 50:50 என்ற விகிதத்தில் பங்கு மூலதன உதவி வழங்க ஒப்புதல் அளித்தது. இந்நிலையில், இத்திட்டத்திற்கான நிதியினை உரிய நேரத்தில் ஒன்றிய அரசு விடுவிக்கும் எனில், இத்திட்டப் பணிகள் திட்ட காலக்கெடுவிற்கு முன்னதாகவே முடிக்கப்படும்.

74. தற்போது, சென்னைக்கு அடுத்தபடியாக அதிவேகமாக வளர்ந்து வரும் இரண்டாம் நிலை நகரங்களான கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாநகரங்களில் மெட்ரோ இரயில் திட்டத்தின் தேவையை உணர்ந்து, அங்கு மெட்ரோ இரயில் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என இந்த அரசு முடிவு செய்தது. அதற்கான விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு ஒன்றிய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. எனினும், இந்தத் திட்ட அறிக்கைகளுக்கு ஒப்புதல் அளிக்காமல், அவற்றை ஒன்றிய அரசு திருப்பி அனுப்பியுள்ளது வருத்தமளிக்கிறது. கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாநகரங்களில் 20 இலட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகையே உள்ளதால், இத்திட்ட அறிக்கைகளுக்கு

ஒப்புதல் அளிக்கப்படவில்லை என ஒன்றிய அரசு விளக்கம் அளித்துள்ளது. தகுதியின் அடிப்படையில் மற்ற மாநிலங்களில் அனுமதிக்கப்பட்ட நகரங்களுடன் ஒப்பிடும்போது, அவற்றை விடப் பெரிய நகரங்களான கோவை மற்றும் மதுரை மெட்ரோ இரயில் திட்டங்களை நிராகரித்திருப்பதன் மூலம், மெட்ரோ இரயில் திட்டத்திலும் தமிழ்நாட்டை ஒன்றிய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் அணுகும் நிலையே காணப்படுகிறது.

75. ஒன்றிய அரசின் கல்விக்கொள்கையில் வரையறுக்கப்பட்ட மும்மொழிப் பாடத்திட்டத்தை இந்த அரசு ஏற்கவில்லை. இதனால், தமிழ்நாட்டிற்கு விடுவிக்கப்பட வேண்டிய மானியங்கள் நிறுத்திவைக்கப்பட்ட போதும், அதனால் பெரும் நிதிச்சுமை ஏற்பட்டபோதும், ஒன்றிய அரசின் மும்மொழிப் பாடத்திட்டத்தை ஏற்பதில்லை என்பதை பல்வேறு தருணங்களில் இந்த அரசு தெளிவுபடுத்தி வந்துள்ளது. என்றுமே இருமொழிப் பாடத்திட்டம் என்பதே தமிழ்நாட்டின் கொள்கை என்பதை இந்த அரசு வெளியிட்டுள்ள தமிழ்நாடு மாநிலக் கல்விக்

கொள்கையில் உறுதியாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. 1968 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்துத் தந்த இருமொழிக் கல்வித் திட்டத்தினை நாம் நமது இரு கண்களைப் போலக் காத்து வருகிறோம். நம் உயிரோடும், உணர்வோடும் கலந்துள்ள செந்தமிழைக் காப்பதில் சமரசம் என்ற பேச்சிற்கே இடமில்லை. எச்சூழ்நிலையிலும் இக்கொள்கையில் எவ்வித மாற்றத்தையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு ஏற்காது.

76. இந்தி மொழித் திணிப்பை எதிர்த்து இம்மாமன்றம் பல்வேறு காலங்களில் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. இவ்வரசு பொறுப்பேற்றதற்குப் பின்னர், 2022 ஆம் ஆண்டு, 'ஒன்றிய அரசின் கல்வி நிறுவனங்களில் இந்தி மொழியே பயிற்று மொழியாக இருக்க வேண்டும்' என்பன உள்ளிட்ட அலுவல் மொழி தொடர்பான பாராளுமன்றக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தக் கூடாது என ஒன்றிய அரசினை வலியுறுத்தி இப்பேரவையில் ஒருமனதாகத் தீர்மானம்

நிறைவேற்றப்பட்டது. எனினும், தற்போது அனைத்து உயர்கல்வி நிறுவனங்களிலும் மூன்றாம் மொழி கற்பிக்கப்பட வேண்டும் என்று பல்கலைக்கழக மானியக் குழு சுற்றறிக்கை வெளியிட்டுள்ளது. பல்கலைக்கழக மானியக் குழுவின் இந்த நடவடிக்கையை மறைமுக இந்தி மொழித் திணிப்பாக மட்டுமே இவ்வரசு கருதுவதோடு, இதனை நடைமுறைப்படுத்தக் கூடாது என ஒன்றிய அரசை இவ்வரசு வலியுறுத்துகிறது.

77. இவ்வகையில் உயர்தனிச் செம்மொழியின் பெருமையினை உலகறியச் செய்திடவும், தமிழ்நாட்டின் உரிமைகளைப் போராடிப் பாதுகாத்திடவும், தமிழ்மக்களின் பெருங்கனவை நிறைவேற்றிடவும் எந்நாளும் ஓயாது உழைத்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு உறுதி பூண்டுள்ளது குறித்து நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

78. நாட்டின் பிற மாநிலங்களும் பின்பற்றும் வகையில், தமிழ்நாடு அரசு கடந்த 5 ஆண்டுகளில்

அறிமுகப்படுத்திய பல வெற்றிகரமான திட்டங்கள் அனைத்துமே மக்களின் தேவையை அறிந்து அவர்களது வளமான வாழ்வு நலன் கருதியே வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், எதிர்வரும் 2030 ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாடு அடைய வேண்டிய பரவலான வளர்ச்சி மற்றும் உயரிய இலக்குகள் குறித்து மக்களின் தேவைகள் மற்றும் கனவுகளைக் கண்டறிந்திட, மாநிலத்திலுள்ள ஒரு கோடியே 91 இலட்சம் கிராமப்புற மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள குடும்பங்களைச் சந்தித்து, அவர்கள் பயன்பெறும் அரசு நலத்திட்டங்கள் குறித்தும், அவர்களுடைய எதிர்பார்ப்புகள் மற்றும் கனவுகளையும் அறிந்திடும் நோக்கத்தில் ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட தன்னார்வலர்களைப் பயன்படுத்தி ‘உங்கள் கனவைச் சொல்லுங்க’ என்ற திட்டம் துவக்கப்பட்டுள்ளது. கடைக்கோடித் தமிழரின் கனவுகளையும், கருத்துகளையும் கண்டறிந்து எதிர்வரும் 5 ஆண்டுகளில், தமிழ்நாடு வளர்ச்சிப் பாதையில் விரைந்து பயணித்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசு

முழு முயற்சியில் ஈடுபட்டுள்ளது. அந்த முயற்சி வெற்றிபெற என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

79. அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை எனது இனிய பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டு, மகாகவி பாரதியாரின் காலத்தால் அழியாத கவிதை வரிகளுடன் எனது உரையை நிறைவு செய்கிறேன்.

வாழிய செந்தமிழ்!

வாழ்க நற்றமிழர்!

வாழிய பாரத மணித்திரு நாடு!